மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, கடையநேரியில் உள்ள மேல்நிலைப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி துவக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

102—

பகுதிநேர நியாய விலைக் கடை

***13978—திரு. வி.எஸ். காளிமுத்து:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் தொகுதி, மூலனூர் கண்ணிவாடி பேரூராட்சி, மொங்கநல்லம்பாளையத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், தாராபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் மொங்கநல்லம்பாளையம் பகுதியைச் சேர்ந்த 240 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 525 குடும்ப அட்டைகளுடன் எரச்சப்பாடி முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. அரசின் நிபந்தனையின்படி, புதிய பகுதிநேரக் கடை திறக்கும்போது, பிரிவினைக்குப்பின் தாய்க் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இந்நேர்வில், பிரிவினைக்குப்பின் 285 குடும்ப அட்டைகளே உள்ளன. எனவே, மொங்கநல்லம்பாளையத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை

2018 ஜூன் 1]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் தொகுதி, மூலனூர் கண்ணிவாடி பேரூராட்சி, மொங்கநல்லம்பாளையம் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கின்றேன். அங்கே மொத்தம் 950 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. ஓரத்தப்பாளையம், எரச்சப்பாடி, மொங்கநல்லம்பாளையம் ஆகிய மூன்று பகுதிகளுக்கும் சேர்த்து ஒரே கடையாக இருந்தது. எனவே, மொங்கநல்லம்பாளையத்தில் வாரத்தில் ஒரு நாள் மட்டும் பகுதிநேரக் கடை இயங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரச்சப்பாடிக்கும், மொங்கநல்லம்பாளையத்திற்கும் இடையே 2 கிலோ மீட்டருக்கும்மேல் தூரம் இருக்கிறது. இரண்டாவது, அந்தப் பகுதி கிராமப்புறப் பகுதியாகவும், போக்குவரத்து வசதி குறைவாகவும் இருப்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவருடைய அனுமதியைப் பெற்று, இதைச் சிறப்பினமாகக் கருதி, அந்தக் கடையைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, சொல்லுங்கள்.*

திரு. வி.எஸ். காளிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பது குறித்து ஆய்வு செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு*

அமைச்சர் அவர்களுக்கு நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாராபுரம் ஒன்றியம், கவண்டச்சிபுதூர் பஞ்சாயத்தில் 1,000 குடும்ப அட்டைகளுக்குமேல் உள்ளது. அந்தக் கடை வாடகைக் கட்டடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, அந்தக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட பொது விநியோகக் கடைக்கு உரிய இடம் இருக்கும்பட்சத்தில், புதிய கடையைக் கட்டிக் கொடுப்பதற்கு இந்த ஆண்டே முயற்சி செய்யப்படும். இடம் இல்லாதபட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவருடைய முன்னுரிமை பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடம் தேர்வு செய்து கொடுப்பாரேயானால், அந்தப் பகுதியில் நிச்சயமாகக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கான அனைத்து சாத்தியக்கூறுகளும் ஆராயப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். பொய்யர்களுக்கு செயலாற்றல்மூலம் பதிலடி கொடுத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், அவருக்குத் துணை நிற்கின்ற மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்கி, வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-05

அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அந்தியூர் வட்டம், அத்தாணி பேரூராட்சியில் அமைந்திருக்கின்ற பெருமாவளையம் பகுதியில் சுமார் 220 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. ஆனால் அவர்களுக்கு பகுதிநேர ரேஷன் கடை இல்லாததால், பஸ் வசதி இல்லாத

2018 ஜூன் 1]

செம்புடிச்சாம்பாளையம் வரை நடந்தே சென்று அவர்கள் நியாய விலைக் கடையில் பொருட்களை வாங்கி வருகின்றார்கள். எனவே, மக்கள் நலன் காக்கும் அம்மாவின் அரசு, பெருமாவளையம் பகுதி மக்களுக்கு ஒரு பகுதிநேர ரேஷன் கடையை அமைத்துத் தர ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதிநேரக் கடையை அமைக்க வேண்டுமென்றால், ஒரு கடைக்கும் இன்னொரு கடைக்கும் குறைந்தபட்சம் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். அதாவது பகுதிநேரக் கடையை அமைக்கும் இடத்திற்கும், தாய் கடைக்கும் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். மலைப் பிரதேசமாக இருந்தால் 1 கிலோ மீட்டர் இருக்க வேண்டும். ஒரு பகுதிநேரக் கடைக்கு 150 கார்டுகள் இருந்தால் போதுமானது. கிராமப்புறங்களைப் பொறுத்தவரையில், பிரித்த பிறகு தாய்க் கடையில், 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்பது அரசின் விதி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 220 குடும்ப அட்டைகளுக்குமேல் உள்ளதாகச் சொல்லியிருக்கின்றார். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை துறையின்மூலம் உரிய முறையில் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு நிறைவேற்றித் தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அடைக்காகுழி ஊராட்சிப் பகுதியில்* ARS DA *032 என்ற நியாய விலைக் கடை வண்டிக்காரவிளை பகுதியில் இயங்கிக்கொண்டு வருகின்றது. இந்த நியாய விலைக் கடையில் 1,287 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. இதனைச் சுற்றி 4 கிலோ மீட்டர் சுற்றளவில்*

[2018 ஜூன் 1

உள்ள கிராமங்களான தாணிவிளை, கடுவாக்குழி, நேத்தன்விளை, விராலிவிளை, பாங்கோடு, கல்வெட்டான்குழி, துண்டுவிளை, மேலத்தோட்டம், கீழத்தோட்டம், சூழக்கல்விளை, கல்லறைக்காடு, தளச்சான்விளை, உதியனூர்விளை, திரிகோவில்விளை, பிராகோடு, குளப்புறம் ஆகிய கிராமப் பகுதிகள் எல்லாம் இதற்கு உட்பட்ட பகுதிகளாகும். ஆகையினால், இந்த அடைக்காகுழி ஊராட்சி, வண்டிக்காரவிளையில் இருக்கின்ற நியாய விலைக் கடையைப் பிரித்து பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கப்பட வேண்டும். அங்கே இருக்கின்ற குளப்புறம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. எனவே அந்த இடத்தில் கடையைப் பிரித்துக் கொடுத்தால், மக்களுக்கு உபயோகமாக இருக்கும். எனவே, அதனை அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக நடத்தப்படுகின்ற கடைகள் சங்கத்தினுடைய குறைந்த நிதி வசதியோடு நடத்தப்படுகின்றன. இந்தப் பகுதிநேரக் கடைகளுக்கு அரசு மானியம் வழங்குவது கிடையாது. பகுதிநேரக் கடையை அமைக்கும்பட்சத்தில் அந்தக் கடைக்குரிய நுகர்வோர் பொருட்களை அந்தப் பகுதி மக்களே எடுத்துச் செல்ல வேண்டும். அதனுடைய செலவினையும் அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். பகுதிநேரக் கடையை அமைப்பதற்கான இடங்களை கட்டடமாகத் தேர்வு செய்து, அதனை இலவசமாகக் கொடுக்க வேண்டும். வாரத்தில் 3 நாட்கள் கடையைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டுதான் இந்த வகையில் அரசு நிபந்தனை விதித்திருக்கின்றது. ஆண்டுக்காண்டு டீசல் விலை, பெட்ரோல் விலை, மின்சாரக் கட்டணம், பணியாளர்களுடைய சம்பள உயர்வு போன்றவற்றால் இந்தக் கடைகளை நடத்துகின்ற LEAD Societies-ன் நிதி ஆதாரம் பற்றாக்குறையாக இருக்கின்றது. மேலும், அது நஷ்டத்தில் இயங்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1,200-க்கும் மேற்பட்ட கார்டுகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றார்கள். எனவே, அதனைக்

கருத்தில்கொண்டு நிச்சயமாக ஒரு பகுதிநேரக் கடையை அமைப்பதற்கான சாத்தியக்கூறு உண்டு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தைத் தேர்வு செய்து கொடுத்து, செலவினை அந்தப் பகுதி மக்களே ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. ராஜேஷ் குமார், உட்காருங்கள்; ஒரு கேள்வி மட்டும்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் நாட்டு மக்கள் நலம் பெறுகின்ற வகையில் துறைகள்தோறும் திட்டங்களை அள்ளித் தந்து கொண்டிருக்கின்ற மாசற்ற மாணிக்கம் மாட்சிமை பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாலிகண்டபுரம் நியாய விலைக் கடையில் 1,850 குடும்ப அட்டைகள் உள்ளன. அந்தக் கடைக்கு அருகில் மூன்றரை கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிற வல்லாபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடையை அமைப்பதற்கு ஏதுவாக, அந்த நேர்வில் அரசினுடைய அத்தனை விதிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வல்லாபுரத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடையைத் திறப்பதற்கு முன்வருவார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை விரைவாகத் துறை ரீதியாகப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைந்த பிறகு, கடந்த ஏழு ஆண்டுகளில் 2,229 கடைகள் புதிதாகத்திறக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று 42 நகரும் நியாய விலைக் கடைகள் தற்போது துறையின் சார்பாக நடத்தப்படுகின்றன. மக்களுக்கு வசதியாக அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை, அந்தந்தப் பகுதி மக்களுக்கு, தங்குதடையற்ற முறையில் வழங்க வேண்டும் என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசை. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகுதான், இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, மலைப் பிரதேசங்கள், கிராமப்புறங்கள் மற்றும் போக்குவரத்து வசதியில்லாத பகுதிகள் மற்றும் எளிதில் மக்கள் அணுக முடியாத பகுதிகளுக்கெல்லாம் 42 நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாக 290 கிராமங்களிலும், சென்னையைப் பொறுத்தவரையில் 2 நகரும் நியாய விலைக் கடைகள் மூலமாக 54 தெருக்களிலும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஏறத்தாழ 28,320 குடும்ப அட்டைகளுக்கு நகரும் கடைகள் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் நடக்கும் மாண்புமிகு திரு. எடப்பாடியார் அவர்களுடைய அரசு இதனைச் செயல்படுத்தி வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மூன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது என்றும், 1,850 குடும்ப அட்டைகள் இருக்கின்றன என்றும் சொல்லியிருக்கிறார். நான் ஏற்கெனவே ஒரு பகுதிநேரக் கடையை அமைக்க வேண்டுமானால், என்னென்ன நிபந்தனைகள் இருக்கின்றன என்பதையும், அந்தப் பகுதிநேரக் கடை அமையவிருக்கிற இடமானது இலவசமாகக் கொடுக்கப்பட வேண்டுமெனவும், கட்டடமாக இருக்க வேண்டுமெனவும், நுகர்பொருட்களைக் கொண்டு செல்லும் செலவையும் அந்தப் பகுதி மக்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்திருக்கிறேன். அந்தத் தாய்க் கடையின் பணியாளரே அந்தப் பகுதிநேரக் கடையையும் வாரத்தில் இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அதற்கான இடத்தைத் தேர்வு செய்து கொடுக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பகுதிநேர நியாய விலைக் கடையை உடனடியாகத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூன் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

நடை மேம்பாலம்

***545—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் தொகுதி, நேரு நகர் மற்றும் வள்ளியம்மை நகர் பகுதிகளை 100 அடி சாலையுடன் இணைக்க நடை மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வில்லிவாக்கம் தொகுதி, நேரு நகர், வள்ளியம்மை நகர் பகுதிகளை 100 அடி சாலையுடன் இணைக்க நடை மேம்பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை. வில்லிவாக்கம் தொகுதியிலுள்ள நேரு நகர், வள்ளியம்மை நகர் பகுதிகள் 100 அடி சாலையைவிட பள்ளமான பகுதிகளாகும். மேலும், அப்பகுதிகளையொட்டி பயன்பாட்டில் இல்லாத இரயில்வே இருப்புப் பாதை உள்ளது. நேரு நகர், வள்ளியம்மை நகர் பகுதி மக்கள் தற்போது சிட்கோ நகர் பிரதான சாலையைப் பயன்படுத்தி வருகிறார்கள். இப்பகுதி மக்கள் தற்போது பயன்பாட்டில் இல்லாத இருப்புப் பாதையைக் கடந்து செல்ல ஏதுவாக இப்பகுதிகளை 100 அடி சாலையுடன் இணைத்து நடை மேம்பாலம் அமைக்கும் பணியானது இரயில்வே துறையால்தான் செய்யப்பட வேண்டும். இப்பகுதியில் நடை மேம்பாலம் அமைப்பது தொடர்பாக இரயில்வே துறையின் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.